**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 69/2023</u>**

நாள் 25.11.2025

PW3 – M.வெங்கடாசலபதி

த/பெ – முருகண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் சேவூர் பந்தம்பாளையத்தில் பிறந்தேன். நான் பி.காம் வரை படித்துள்ளேன். நான் கோபி கலைக்கல்லூரியில் 1992–1995–ம் ஆண்டு வரையில் படித்தேன். அதற்கு பிறகு திருப்பூரில் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்று விட்டேன். தற்போதும், கம்பெனியில் வேலைக்கு சென்று வருகிறேன். வாதி எனக்கு எனது தாயார் முறையில் அண்ணன் முறை ஆவார். 3–ம் பிரதிவாதியின் மாமனாரும், எனது தாத்தாவும் உடன்பிறந்தவர்கள். அதனால், வாதி எனக்கு பங்காளி உறவு கிடையாது என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் இடையே சிறு வயது முதலே பழக்கம். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மாராத்தாள் என்பவரின் இறப்பு சான்றிதழை நான் பார்த்துள்ளேனா? என்றால் இல்லை. அதனால், அந்த மாராத்தாள் இறப்பு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், அவர் உடல்நிலை சரியில்லாமல் தான் இறந்து போனார். அந்த மாராத்தாளை வாதி குடும்ப சண்டையில் அடித்து வீட்டை விட்டு துரத்தி விட்டார் என்றும், 30 ஆண்டுகாலமாக அந்த மாரத்தாள் எங்கு இருக்கிறார் என்றே யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. அந்த மாரத்தாளின் இறப்பிற்கு நான் சென்றிருந்தேன். அந்த மாராத்தாளின் உடலை அரசு சுடுகாட்டில் தான் அடக்கம் செய்தார்கள். அவ்வாறு அரசு சுடுகாட்டில்

உடலை அடக்கம் செய்யும் போது பஞ்சாயத்தில் அதற்கு ரசீது தருவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாராத்தாளின் இறப்பை பதிவு செய்தார்களா? என்று எனக்கு தெரியாது.

2. வாதி தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். வாதி அவரது தாயார் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை என்றும், அதனால் மாராத்தாள் இறந்து விட்டார் என்று சாட்சி சொல்லுமாறு சொல்லி அழைத்து வந்தார். இறந்துபோன நபரின் இறப்பை பதிவு செய்யவில்லை எனில், பின்னிட்டு அந்த இறப்பை பதிவு செய்ய சட்ட வழிவகை உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு மாராத்தாளின் இறப்பை பதிவு செய்ய வாதி நடவடிக்கை எடுத்தாரா? என்றால் வாதி வருவாய் கோட்டாச்சியரிடம் மனு கொடுத்துள்ளார். அந்த 2,3 மாதங்களுக்கு முன்பு தான் மனு கொடுத்தார். அதில் நானும், சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். அந்த மனு நிலுவையில் தான் இருந்து வருகிறது. அதனால், மாராத்தாளின் இறப்பு இன்றைய தேதி வரையில் பதிவாகவில்லை என்றால் சரிதான். அந்த மாராத்தாள் குடும்ப சண்டையில் கோபித்து கொண்டு வீட்டை விட்டு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே சென்று விட்டார் என்றும், வாதி எனக்கு சிறு வயது முதலே பழக்கம் என்பதால் அவருக்காக வேண்டி இறக்காத மாராத்தாளை இறந்து போய்விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மாராத்தாள் உண்மையாகவே இறந்து போயிருந்தால் அவருடைய இறப்பை கடந்த 3 மாதங்களுக்குள் பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அந்த மாராத்தாள் இறந்து போனது சம்பந்தமாக செய்தித்தாள் விளம்பரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால்,

அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.25 14:42:16 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**